# சுன்னத்தான நோன்புகள்

மௌலவியா: உம்மு முஆ(ண)ஸ் மஸிய்யா B.A (Hons)

| | |
|---|---|
| ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்புகள் | நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்: யார் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று பின்னர்அதைத் தொடரந்து ஷவ்வால் மாதம் ஆறு நோன்புகள் நோற்கிறாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு வைத்தவர் போன்றாவார்.<br>அறிவிப்பவர்: அபூ அய்யூப் அல் அன்ஸாரி(ரழி)<br>நூல்: முஸ்லிம் |
| ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நோன்புகள் | 1 முஅததுல் அதவியா என்ற பெண்மணி, ஆயிஷா(ரழி) அவர்களிடம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நோன்புகள் நோற்றார்களா? என்று கேட்டார். அதற்கவர்கள் ஆம் என்று பதிலளித்தார்கள். (முஆததுல் அஸவிய்யா அவர்கள் கூறினார்கள்:) மாதத்தில் எந்த நாட்களில் நபியவர்கள் நோன்பு வைத்தார்கள்? என்று கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள், மாதத்தில் எந்த நாட்களில் நோன்பு வைப்பது என்தைப்பற்றி அவர்கள் பொருட்படுத்த வில்லையே எனப் பதிலளித்தார்கள்.<br>நூல்: முஸ்லிம்<br>2 அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: என் நெருங்கிய தோழர் நபி(ஸல்) அவர்கள் எனக்கு மூன்று விஷயங்களை உபதேசம் செய்தார்கள். ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்புகள் நோற்பது, ளுஹாவில் இரண்டு ரகாஅத்துக்கள் தொழுவது, தான் உறங்கமுன் வித்ருத் தொழுவது (போன்றவையாகும்)<br>நூல்: புகாரி, முஸ்லிம்<br>3 ஒவ்வொரு மாதமும் மூன்று நோன்புகள் நோற்பது காலம் முழுவதும் நோன்பு நோற்றதைப் போன்றதாகும் என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். அறிவிப்பவர் அப்துல்லாஹ் பின் அம்ரு பின் அல்-ஆஸ் (ரழி)<br>நூல்: புகாரி, முஸ்லிம்<br>4 நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்: மாதத்தில் நீர் மூன்று நோன்புகள் நோற்றால் பிறை 13,14,15 ஆகிய நாற்களில் நோற்பீராக |

| | |
|---|---|
| | அறிவிப்பவர்: அபூதர் (ரழி)<br>நூல்: திர்மிதி |
| திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் நோன்பு பிடிப்பது | ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபி(ஸல்) அவர்கள் திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும், முயற்சி செய்து நோன்பு வைப்பார்கள்.<br>நூல்: திர்மிதி |
| அறபா நாளில் நோன்பு நோற்பது | அபூ கதாத-(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் அறபா நாள் நோன்பைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கவர்கள் அந்நோன்பு அதற்கு முந்திய வருடங்களின் பாவங்களையும், அதற்குப் பிந்திய வருடத்தின் பாவங்களையும் அழித்து விடுகிறது எனப் பகர்ந்தார்கள்.<br>நூல்: முஸ்லிம் |
| முஹர்ரம் மாதத்தில் நோன்பு பிடித்தல் | நபி(ஸல்) அவர்கள் நவிறார்கள்: ரமழானின் நோன்புக்குப் பிறகு மிகச்சிறப்பான நோன்பு அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதத்தின் நோன்பாகும்.<br>அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரழி)<br>நூல்: முஸ்லிம் |
| ஆஷூ ரா நாள் (முஹர்ரம் 10ம் நாள்) நோன்பு நோற்பது | 1 அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள்ஆஷூ ரா நாளன்று (முஹர்ரம் 10ம் நாள்) நோன்பு பிடித்தார்கள். மேலும் நோன்பு நோற்குமாறு தமது தோழர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.<br>நூல்: புகாரி, முஸ்லிம்<br><br>2 அபூ கதாதா (ரழி) அவர்கள் அறிவிக்கிறாரகள்: நபி (ஸல்) அவர்கள் ஆஷூ ரா நாளில் நோன்பு வைப்பதன் சிறப்பைப்பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள் ஆஷூ ரா நாளில் நோன்பு நோற்பது அதற்கு முன்னுள்ள வருடத்தின் பாவங்களை அழித்து விடுகின்றது எனப் பகர்ந்தார்கள்.<br>நூல்: முஸ்லிம் |
| தாஸூ ஆ நாள் (முஹர்ரம் 9ம் நாள்) நோப்பு நோற்பது | நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்அடுத்த வருடம் (இவ்வுலகில்) உயிரோடிருந்தால் நிச்சயமாக முஹர்ரம் மாதம் 9ம் நாள் (தாஸூ ஆ தினம்) அன்று நோன்பு பிடிப்பேன்<br>அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரழி)<br>நூல்: முஸ்லிம் |
| ஷஹ்பான் மாதத்தில் நோன்பு பிடித்தல் | ஆயிஷா (ரழி) அவர்கள் கூறினார்கள்: (ரமழானிற்குப் பிறகு) ஷஹ்பான் மாதத்தை விட வேறு எந்த மாதத்திலும் நபி(ஸல்) அவர்கள் அதிகமாக நோன்பு வைப்பவர்களாக இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஷஹ்பான் மாதம் முழுவதுமே நோன்பு வைப்பார்கள். மற்றொரு அறிவிப்பிலே சில நாட்கள் தவிர |

| | |
|---|---|
| | ஷஹ்பானின் பெரும் பகுதி நாட்களில் அவர்கள் நோன்பு வைப்பவர்களாக இருந்தார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.<br>நூல்: புகாரி, முஸ்லிம் |
| திங்கட் கிழமையில் நோன்பு பிடிப்பது | அபூ கதாதா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: திங்கள் கிழமை நோன்பு வைப்பதன் சிறப்பைப் பற்றி அண்ணல் நப(ஸல்) அவர்களிடம் கேட்கப் பட்டது. அதற்கவர்கள்அந்த நாளில் தான் நான் பிறந்தேன், அந்த நாளில் தான் நபியாக அனுப்பப்பட்டேன் என்று கூறினார்கள். அல்லது அன்று தான் என்மீது குர்ஆன் இறக்கியருளப்பட்டது என்று கூறினார்கள்:<br>நூல்: முஸ்லிம் |
| துல்ஹஜ் மாதத்தின் முதல் ஒன்பது நாட்களில் நோன்பு பிடித்தல் | இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களில் செய்யப்படும் நல்லமல்கள் மற்ற நாட்களின் நல்லமல்களை விட அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமான வையாகும். அதற்குத் தோழர்கள், அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதையும் விடவுமா? என்று கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் ஆம் எனினும் அல்லாஹ்வின் பாதையில் தம் உயிர், பொருளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்ற பின்னர் அதில் எதையும் திருப்பிக் கொண்டுவராத ஒரு மனிதனின் அமலைத் தவிர என்று கூறினார்கள்.<br>அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)<br>நூல்: புகாரி |
| அல்லாஹ்வின் பாதில் நோன்பு நோற்றல் | நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஸஈதில் குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யார் அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் நோன்பு வைக்கின்றாரோ அந்த நோன்பின் மூலம் அல்லாஹ் அவரின் எழுபது ஆண்டு காலம் நரக நெருப்பைவிட்டும் தூரமாக்குகிறான்.<br>நூல்: புகாரி, முஸ்லிம் |
| பொதுவாக நோன்பு பிடித்தல் | இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் நோன்பு விடுவதேயில்லை என்று கூறும் அளவுக்கு நோன்பு பிடிப்பவர்களாகவும், நோன்பு நோற்பதேயில்லை என்று கூறும் அளவுக்கு நோன்பு விடுபவர்களாவும் இருந்தார்கள்.<br>நூல்: புகாரி, முஸ்லிம் |
| தாவூத் நபியவர்கள் நோற்றது போன்ற நோன்பு | நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்: அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான நோன்பு தாவூத் நபியின் நோன்பாகும். அவர் இரவின் அரைப்பகுதில் தூங்குபவராககும், அதன் மூன்றின் ஒரு பகுதியில் நின்று வணங்குபவராகவும், அதன் ஆறில் ஒரு பகுதி தூங்குபவராகவும் இருந்தார்கள். மேலும் அவர் ஒரு நாள் நோன்பு பிடிப்பவராககும், ஒரு நாள் நோன்பு விடுபவராகவும் இருந்தார்கள். |

| | |
|---|---|
| | அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரழி)<br>நூல்: புகாரி, முஸ்லிம் |